செ.வெ.எண்: 06 நாள்:04.08.2021

**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (04.08.2021) நடைபெற்றது.

மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் அனைவரும் பராமரிப்பு உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை, தையல் இயந்திரம், வேலைவாய்ப்புகள் மற்றும் பல உதவிகள் கேட்டு இந்த சிறப்பு முகாமில் 20 மனுக்கள் பெறப்பட்டு சம்மந்தப்பட்ட துறைகளுக்கு பரிந்துறை செய்யப்பட்டது. மேலும், இக்கூட்டத்தில் 2 மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டைகளையும் 2 மாற்றுத் திறனாளிகளுக்கு தேசிய அறக்கட்டளை சட்டத்தின் கீழ் பாதுகாவலர் நியமன சான்றுகளையும் மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

மேலும், மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் கோவிட்-19 தடுப்பூசி முகாமிற்கோ அல்லது அவரவர் இல்லத்திற்கே சென்று போட்டுக்கொள்ளுமாறும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகள் இல்லத்திற்கே சென்று 1069 நபர்களுக்கும், மறுவாழ்வு காப்பகத்தில் உள்ள 20 நபர்களுக்கு, சிறப்பு முகாம்கள் மூலம் 700 நபர்கள் வீதம் மொத்தம் 1789 நபர்களுக்கு கோவிட்-19 தடுப்பூசி போடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலா் திரு.வ.சீனிவாசன், இணை இயக்குநர் மருத்துவர்.ராஜா மற்றும் அனைத்து துறை அரசு அலுவர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**